ஐந்தாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோயம்புத்தூர்.

முன்னிலை : திரு. பெ. க. சிவக்குமார்,
ஐந்தாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, கோயம்புத்தூர்.

2026-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 07ம் நாள் வெள்ளிக்கிழமை

அசல் வழக்கு. 388/2017
*(CNR.No.TNCB01 – 001606 – 2017)*

திருமிகு. எம்.சங்கரர் ... வாதி

// எதிர்//

திருமிகு. கே.முரளிதரன் ... பிரதிவாதி

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்பாக 06.08.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்குரைஞர் திருமிகு.உமாதேவி அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திருமிகு.டி.கார்த்திக் பிரபு அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் :-

**தீர்ப்புரை**

ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வேண்டியும், மாற்று பரிகாரமாக முன்பணத்தொகையை திரும்பத்தர வேண்டியும் வாதியால் பிரதிவாதிக்கெதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வழக்குரையின் சுருக்கம்:-**

பிரதிவாதிக்குச் சொந்தமான வழக்குச் சொத்தை ரூ.9,50,000/-க்கு விற்க ஒப்புக்கொண்டு ரூ.8,17,000/-ஐ முன்பணமாகப் பெற்றுக்கொண்டு மீதித்தொகையை 3 மாதங்களுக்குள் கொடுத்து கிரையத்தை நிறைவேற்றிக்கொள்வதாக உடன்பட்டு வாதிக்கும் பிரதிவாதிக்குமிடையே 23.12.2015 அன்று ஒரு விற்பனை உடன்படிக்கை ஏற்பட்டது. மேற்கண்ட 3 மாத காலம் முடிந்தபிறகு வாதி பிரதிவாதியை அணுகி

கேட்டதற்கு பிரதிவாதியின் வேண்டுகோளுக்கு இணங்க 23.03.2016 அன்று மேலும் 10 மாதங்கள் கால நீடிப்பு செய்யப்பட்டது. வாதியானவர் எப்போதும் கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்றிக்கொள்ள விருப்பமாகவும், தயாராகவும் இருந்துள்ளார். அதன்பிறகு மீண்டும் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க 03.01.2017 அன்று 3 மாதங்கள் கால நீடிப்பு செய்யப்பட்டது. அவ்வாறு கால நீடிப்பு செய்யப்பட்டும் பிரதிவாதி விற்பனையை நிறைவேற்றித்தர முன்வராததால் 28.04.2017 அன்று வாதி பிரதிவாதிக்கு ஒரு வழக்கறிவிப்பு அனுப்பி அதை பிரதிவாதி பெற்றுக்கொள்ளாததால் திருப்பப்பட்டுவிட்டது. ஆகவே மீண்டும் 06.05.2017 அன்று விற்பனையை நிறைவேற்றித்தரச் சொல்லி வாதி பிரதிவாதிக்கு ஒரு அறிவிப்பு ஒன்றை அனுப்பினார். அவ்வாறு அறிவிப்பு அனுப்பியும் விற்பனையை நிறைவேற்றித்தர பிரதிவாதி முன்வரவில்லை. ஆகவே பிரதிவாதிக்கெதிராக ஏற்றத்தை ஆற்றுக பரிகாரத்தை வழங்கவும், மாற்று பரிகாரமாக முன்பணத் தொகையை வட்டியுடன் திரும்பத்தரவும் தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டும்.

3) **<u>பதிலுரையின் சுருக்கம் :–</u>**

கடந்த 2012ம் வருடம் டிசம்பர் மாதம் பிரதிவாதியின் அண்ணன் மகளின் திருமணச் செலவிற்காக பணம் தேவைப்பட்ட காரணத்தால் ஒரு செல்வகுமாரி என்பவரை அணுகி ரூ.4,00,000/–ஐ கடனாகப் பெற்றுக்கொண்டு ஒரு வருட காலத்திற்குள் அடமானத்தை மீட்டுக்கொள்வதாக ஒப்புக்கொண்டு 05.12.2012 அன்று அவரது பெயருக்கு ஒரு அடமானக் கடன் பத்திரத்தை பிரதிவாதி எழுதிக்கொடுத்தார். ஒரு வருட காலத்திற்குள் அசல் தொகையை பிரதிவாதி கொடுக்க இயலாமல் போனதால் மேற்படி செல்வகுமாரி வாதியை அறிமுகப்படுத்தி வாதியின் பெயருக்கு ஒரு கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்தித்தருமாறும், வாதி பிரதிவாதி செலுத்த வேண்டிய கடனை செலுத்திவிடுவாரென்றும் சொன்னதன் பேரில் ரூ.8,17,000/–ஐ முன்பணமாகப் பெற்றுக்கொண்டதாக உரைத்து வாதியின் பெயருக்கு 23.12.2015 அன்று ஒரு பெயரளவிிலான கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அசல் தொகையாகிய ரூ.4 லட்சத்தை பிரதிவாதி வாதியிடம் கொடுக்க தயாராக இருந்தும் அதைப்

பெற்றுக்கொள்ளாமல் வாதி காலதாமதப்படுத்தினார். மேலும் மோசடியாக கிரைய ஒப்பந்தத்தின் கால அளவை நீடித்ததாக பொய்யான உரைகளை உரைத்துள்ளார். அவ்வாறு எவ்வித கால நீடிப்பையும் பிரதிவாதி கேட்கவில்லை. ஆகவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது.

4) <u>வழக்குரை, பதிலுரை மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு வனையப்பட்ட வழக்கெழுவினாக்கள் பின்வருமாறு :–</u>

1. 23.12.2015 தேதியிட்ட விற்பனை ஒப்பந்தம் உண்மையானதா?

2. வாதி வேண்டிய ஏற்றதை ஆற்றுக பரிகாரத்தைப் பெற வாதிக்கு உரிமையுள்ளதா?

3. விற்பனை ஒப்பந்தம் பிணையத்திற்காக ஏற்படுத்தப்பட்டதா?

4. வாதி வேண்டிய பரிகாரத்தைப் பெற வாதிக்கு உரிமையுள்ளதா?

5. விலையாவணத்தை ஏற்படுத்திக்கொள்ள வாதி விருப்பமாகவும், தயாராகவும் இருந்துள்ளாரா?

5) வழக்கின் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டு வாதிகள் தரப்பில் வாதி ஒரு சாட்சியாக விசாரிக்கப்பட்டு, 5 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் ஒரு சாட்சி விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) <u>23.12.2015 தேதியிட்ட விற்பனை ஒப்பந்தம் உண்மையானதா?</u>

வழக்குச் சொத்தை ரூ.9,50,000/–க்கு விலைக்குப் பேசி ரூ.8,17,000/–ஐ முன்பணமாகப் பெற்றுக்கொண்டு மீதித்தொகையை 3 மாதத்திற்குள் கொடுத்து விலையாவணத்தை ஏற்படுத்திக்கொள்வதாக விற்பனை ஒப்பந்தம் வா.சா.ஆ–2 கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதென்றும், வாதி தயாராக இருந்தும்

பிரதிவாதி கிரையத்தை நிறைவேற்றித்தர முன்வரவில்லையென்றும், குறிப்பாக வாதியால் பரிகாரம் வேண்டப்பட்டு, பிரதிவாதியின் பெயரிலான கிரைய பத்திர நகல், கிரைய ஒப்பந்தம், வழக்கறிவிப்பு, திருப்பி அனுப்பப்பட்ட அஞ்சல் உறை, அஞ்சல் ரசீது ஆகிய ஆவணங்கள் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட கிரைய ஒப்பந்தமானது சொத்தை விற்பதற்காக ஏற்படுத்தப்படவில்லையென்றும், ரூ.4 லட்சத்தை பிரதிவாதி கடன் பெற்றதற்காக ஏற்படுத்தப்பட்டதென்றும் பிரதிவாதியால் மறுத்துரைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு மறுத்துரைக்கப்பட்டிருந்த போதிலும், வாதியை குறுக்கு விசாரணை செய்த போதும், பிரதிவாதி தனது சாட்சியத்தை முன்வைத்த போதிலும் மேற்கண்ட விற்பனை ஒப்பந்தம் உண்மையானதெல்லவென எதிர்வாதம் முன்வைக்கப்படாததோடு, கிரைய ஒப்பந்தம் உண்மையானதென ஒப்புக்கொண்டு பிரதிவாதியாலேயே சாட்சியம் முன்வைக்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட கிரைய ஒப்பந்தம் உண்மையானதென மேற்கண்ட வழக்கெழு வினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

7) <u>விற்பனை ஒப்பந்தம் பிணையத்திற்காக ஏற்படுத்தப்பட்டதா?</u>

பிரதிவாதி தனது பதிலுரையில் வழக்கு விற்பனை ஒப்பந்தமானது கடனுக்காக பிணையத்திற்காக ஏற்படுத்தப்பட்டதென மறுத்துரைத்திருந்த போதிலும், நீதிமன்றத்தில் தனது சாட்சியத்தை முன்வைத்த போது சொத்தை விற்பதற்கான விற்பனை ஒப்பந்தமென பிரதிவாதியே ஒப்புக்கொண்டுள்ளதால் விற்பனை ஒப்பந்தமானது பிணையத்திற்காக ஏற்படுத்தப்படவில்லையென இவ்வழக்கெழு வினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

8) <u>விலையாவணத்தை ஏற்படுத்திக்கொள்ள வாதி விருப்பமாகவும், தயாராகவும் இருந்துள்ளாரா?</u>

விலையாவணத்தை ஏற்படுத்திக்கொள்ள வாதி எப்பொழுதும் விருப்பமாகவும், தயாராகவும் இருந்துள்ளதாக சாட்சியத்தை முன்வைத்திருந்த போதிலும், மேற்கண்ட சாட்சியத்தை பிரதிவாதி தரப்பில் எவ்வகையிலும்

மறுத்துரைக்கவில்லை. ஆகவே விலையாவணத்தை நிறைவேற்றிக்கொள்ள வாதி தயாராகவும், விருப்பமாகவும் இருந்துள்ளாரென இவ்வழக்கெழு வினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

9) <u>வாதி வேண்டிய ஏற்றதை ஆற்றுக பரிகாரத்தைப் பெற வாதிக்கு உரிமையுள்ளதா? வாதி வேண்டிய பரிகாரத்தைப் பெற வாதிக்கு உரிமையுள்ளதா?</u>

**9(1)** வழக்குச் சொத்தை ரூ.9,50,000/-க்கு விலைக்குப் பேசி ரூ.8,17,000/-ஐ முன்பணமாகப் பெற்றுக்கொண்டு மீதித்தொகையை 3 மாதத்திற்குள் கொடுத்து விலையாவணத்தை ஏற்படுத்திக்கொள்வதாக விற்பனை ஒப்பந்தம் வா.சா.ஆ-2 கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதென்றும், வாதி தயாராக இருந்தும் பிரதிவாதி கிரையத்தை நிறைவேற்றித்தர முன்வரவில்லையென்றும், குறிப்பாக வாதியால் பரிகாரம் வேண்டப்பட்டு, பிரதிவாதியின் பெயரிலான கிரைய பத்திர நகல், கிரைய ஒப்பந்தம், வழக்கறிவிப்பு, திருப்பி அனுப்பப்பட்ட அஞ்சல் உறை, அஞ்சல் ரசீது ஆகிய ஆவணங்கள் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட கிரைய ஒப்பந்தமானது சொத்தை விற்பதற்காக ஏற்படுத்தப்படவில்லையென்றும், ரூ.4 லட்சத்தை பிரதிவாதி கடன் பெற்றதற்காக ஏற்படுத்தப்பட்டதென்றும் பிரதிவாதியால் மறுத்துரைக்கப்பட்டுள்ளது.

**9(2)** அவ்வாறு மறுத்துரைக்கப்பட்டிருந்த போதிலும், வாதியை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது, "**பிரதிவாதிக்கும் உங்களுக்கும் 23.12.2015 அன்று கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேலானதால் அவர் பெற்ற முன்பணத் தொகையான ரூ.8,17,000/-க்கு வட்டியுடன் சேர்த்து ரூ.13 லட்சமாக 6 மாத காலத்திற்குள் தர தயாராக உள்ளாரென்றும், ஒரு வேளை 6 மாத காலத்திற்குள் மேற்கண்ட தொகையை தர முடியாத பட்சத்தில் மீதித் தொகையான ரூ.1,33,000/-த்தை பெற்றுக்கொண்டு சொத்தை உங்கள் பெயருக்கு கிரையம் செய்துத்தர தயாராக உள்ளார் என்றும் சொன்னால் நான் ஒப்புக்கொள்கிறேன்**." என சாட்சியத்தை முன்வைத்துள்ளார். மேலும் பிரதிவாதி தனது சாட்சியத்தை முன்வைத்த போதும் மேற்கண்ட சாட்சியத்தை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார். ஆகவே ரூ.13

லட்சத்தை 6 மாத காலத்திற்குள் பிரதிவாதி வாதிக்கு தர வேண்டுமென்றும், அவ்வாறு தராத பட்சத்தில் வழக்கில் கோரியவாறு வாதிக்கு ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கிடைக்கத்தக்கதென்றும் இவ்வழக்கெழு வினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**இறுதியாக,**

**1)** ரூ.13 லட்சத்தை 6 மாத காலத்திற்குள் பிரதிவாதி வாதிக்கு தர வேண்டுமென்றும், அவ்வாறு தராத பட்சத்தில் வழக்கில் கோரியவாறு வாதிக்கு ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கிடைக்கத்தக்கதென்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

**2)** வழக்கின் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டுமென ஆணையிடப்படுகிறது.

// இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிப்பொறியியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் சரி பார்க்கப்பட்டு, 2026ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 07ம் நாளான இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது. //

P K SIVAKUMAR
Digitally signed by P K SIVAKUMAR
Date: 2026.08.10 13:03:54 +0530

ஐந்தாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
கோயமுத்தூர்.

**<u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் பட்டியல் :–</u>**

**<u>வாதி தரப்பு சாட்சி :–</u>**

| | |
|---|---|
| வா.சா.1 | திருமிகு.சங்கரர் |

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் –</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ – 1 | 28.11.2011 | கிரைய பத்திரம் நகல் |
| வா.சா.ஆ – 2 | 23.12.2015 | கிரைய ஒப்பந்தம் அசல் |
| வா.சா.ஆ – 3 | 06.05.2017 | வழக்கறிவிப்பு அலுவலக நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ – 4 | 28.04.2017 | திருப்பப்பட்ட அஞ்சல் அட்டை |
| வா.சா.ஆ – 5 | – | அஞ்சலக இரசீது அசல் |

**வாதி தரப்பு சாட்சி :–**

| | |
|---|---|
| பி.வா.சா.1 | திருமிகு.முரளிதரன் |

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :–**

இல்லை

P K SIVAKUMAR

Digitally signed by P K SIVAKUMAR
Date: 2026.08.10 13:03:48 +0530

ஐந்தாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
கோயமுத்தூர்.